ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2363/81 - 2023 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.12.22

*2363/81 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

**கெக்கிராவ பிரதேச சபைஅதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்குரிய அங்கீகாரம்**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய, 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டதற்கு இணங்க, கெக்கிராவ பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய" கட்டம் II,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 21.

EOG 12-0339/1

1A - PG 6586 — 21 (2023/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## கெக்கிராவ பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதி அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி தொடர்பான அறிவித்தல்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(A) ஆம் பிரிவிற்கு அமைய ஒழுங்கு செய்யப்பட்ட, கெக்கிராவ பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதி அபிவிருத்தித் திட்டத்திற்கான 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், குறித்த 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(F) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய அனுமதிக்கப்பட்டது என அதன் சட்டத்தின் பிரிவு 8(G) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க** *(பா. உ.),*
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*12 ஆவது மாடி,*
*"செத்சிறிபாய" கட்டம் II,*
*பத்தரமுல்லை,*
*2023, திசெம்பர் 22.*

EOG 12-0339/2

---

## கெக்கிராவ பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதி அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க (திருத்தப்பட்ட), 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(A) ஆம் பிரிவின் அதிகாரங்களுக்கு அமைய கெக்கிராவ பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் ஒரு பகுதி அபிவிருத்தித் திட்டத்தினை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணதுங்க அவர்களினால் குறித்த சட்டத்தின் 8(F) ஆம் பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க, 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**நிமேஷ் ஹேரத்,**
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2023, திசெம்பர் 22.*

EOG 12-0339/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.